**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

**OS No.25/2022**

2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Cross Examination of DW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோபாலகிருஷ்ணன் | தந்தை பெயர் | அய்யாவு |
| கிராமம் | கந்தர்வக்கோட்டை | தாலுகா | கந்தர்வக்கோட்டை |
| வயது | 45 | தொழில் | எலக்ட்ரிகல் கடை |

நாள் : 25.09.2025

பி.சா.1

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் எனக்கு பொது அதிகாரம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். எதிர் வழக்குரைக்கு யார் விபரம் கூறினார் என்றால் எனது அம்மாவும் நானும் தான் சொன்னோம். தாவா சொத்திற்கு வாதியின் தாத்தா ரெத்தினசாமி என்பவரின் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதனை ஆட்சேபித்து மாவட்ட வருவாய் அலுவலரிடம் நாங்கள் மனு தாக்கல் செய்தோம் என்றால் பட்டாவை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்தோம். எங்கள் இடத்திற்கு அவர் பெயரையும் பட்டா கொடுத்து விட்டார்கள். அந்த மனு விசாரணையில் மாவட்ட வருவாய் அலுவலர் பி.சா.ஆ.8 உத்தரவு மூலமாக எங்கள் பெயருக்கு பட்டா கொடுக்க உத்தரவிடவில்லை என்றால் சரிதான்.

2) மேற்படி உத்தரவினை ஆட்சேபித்து, நான் வழக்கு ஏதும் தாக்கல் செய்தேனா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்று உத்தரவு உள்ளது, அதன் பிறகு வாதி எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். பி.சா.ஆ. 8 உத்தரவு வாதிக்கு எந்த வித அறிவிப்பும் கொடுக்காமல் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவு கொரோனா தொற்று காலத்தில், பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து, சர்க்கார் புறம்போக்கு என பதிவு செய்யப்பட்டுள்ளது தவறு என்பது எனது கட்சி என்றால் சரிதான். வாதிக்கு சொந்தமான தாவா சொத்தை பல ஆண்டுகளாக அனுபவித்து வருவதால் எங்களுக்கு உரிமை ஏற்பட்டதாக சொல்ல வருகிறேன் என்றால் சொத்து வாதிக்கு சொந்தமானது இல்லை, நாங்கள் பல ஆண்டுகளாக அனுபவித்து வருவதால் உரிமை கூறுகிறோம்.

3) தாவா சொத்து எங்களுக்கு உரிமையானது என்பதை காட்டுவதற்கு, உரிமை மூல ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்து கிரையம் ஏற்பட்ட சொத்து அல்ல, பரம்பரை பரம்பரையாக அனுபவம் செய்யும் சொத்து ஆகும். தாவா சொத்து சம்மந்தமாக உரிமை மூல ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை, அது பூர்வீக இடம் ஆகும். நாங்கள் பரம்பரையாக அனுபவித்து வருவது 100

வருடங்கள் இருக்குமா என்றால் இருக்கும். தாவா சொத்து குறித்து, எனது பெயரிலோ, எனது முன்னோர்கள் பெயரிலோ, வருவாய் ஆவணங்களில் பதிவுகள் இருந்ததா என்றால் இருந்தது, சாட்சி தற்போது அது குறித்து தெரியவில்லை என்று பதில் அளிக்கிறார். எனது தந்தை பெயரில் உள்ள பட்டா, சிட்டா ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

4) தாவா சொத்திற்கு அருகாமையில் எனது வீடு உள்ளதா என்றால் எனது சித்தப்பா வீடு உள்ளது. பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து தற்போது காலி மனையாக தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது எதிர் வழக்குரையில் தாவா சொத்தில் மின் இணைப்பு உள்ளதாகவும் மற்றும் வீட்டு எண் உள்ளதாகவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எவ்வளவு வருடங்களாக மின் இணைப்பு உள்ளது என்றால் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக மின் இணைப்பு உள்ளது. பி.சா.ஆ.3, பி.சா.ஆ.4, பி.சா.ஆ.12 மற்றும் பி.சா.ஆ.13 ஆகிய ஆவணங்கள் இந்த வழக்கு சொத்திற்கு சம்மந்தமானவை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி மின் இணைப்பு தாவா சொத்தில் இல்லை என்றால் சரியல்ல.

5) நான் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீதுகள் பி.சா.ஆ.9 முதல் பி.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. கஜா புயலில் எனது வீடு இடிந்து விட்டது என்றால் சரியல்ல. முழுவதுமாக இடிந்துவிட்டதா என்றால் ஒரு பகுதி மட்டும் இடிந்து விட்டது. அதற்காக இழப்பீடு கேட்டோமா என்றால் கேட்டோம் ஒரு பகுதி மட்டும் இடிந்து விட்டதால் இழப்பீடு தரவில்லை. அப்போது இருந்த மின் இணைப்பு முழுவதுமாக துண்டிக்கப்பட்டு விட்டதால், மீண்டும் புதிதாக மின் இணைப்பு பெற்றோம் என்றால் சரிதான். மேற்படி விபரங்களை நான் எனது எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மின்வாரிய ரசீதுகள் தாவா சொத்திற்கு உரியதா என்பது மின் வாரிய அதிகாரிகளை விசாரித்தால் தெரிய வரும் என்றால் ரசீதை பார்த்தால் தெரியவரும், தாவா சொத்திற்கு உரியது தான்.

6) இரத்தினசாமியின் இதர வாரிசுகள் எங்கள் உரிமையை ஒப்புக்கொண்டதாக சொல்லி, நான் கட்சி செய்தேனா என்றால் இல்லை. பி.சா.ஆ.6 மற்றும் பி.சா.ஆ.7 ஆவணங்கள் பிமெமோவே இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களில் வீடு இருப்பதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் கூரை கொட்டகை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 13.09.1934 தேதியில், வாதியின் தாத்தா இரத்தினசாமி என்பவரால் தாவா சொத்து கிரையம் பெறப்பட்டது என்றாலும் அதன் பிறகு அவரது வாரிசுகளால் தொடர்ந்து அனுபவம் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி 13.09.1934 தேதியிட்ட பத்திரம் குறித்து எனக்கு எப்போது தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்த போது தெரியும். தாவா

சொத்தினை இரத்தினசாமியின் வாரிசுகளுக்காக வாதி பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து, தற்போதும் இரத்தினசாமி வாரிசுதாரர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கோ, எனது முன்னோர்களுக்கோ எந்த அனுபவமும் உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

7) தாவா சொத்தில் எங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லாததால் தான் பி.சா.ஆ. 8 உத்தரவை ஆட்சேபித்து நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல. எங்களது எதிர்வாதம் பொய்யானது என்பதால் தான் எனது தாயார் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல, எனது தாயாருக்கு 90 வயது என்பதாலும், படுத்த படுக்கையாக இருப்பதால் சாட்சியம் அளிக்க வரவில்லை. தாவா சொத்து, எனது தந்தைக்கு பாகமாக ஒதுக்கப்பட்டதாக சொல்கிறேனா என்றால் பரம்பரை சொத்து ஆகும், எனது அப்பா மட்டுமே வாரிசு ஆவார். எனது தாத்தா பெயர் மாணிக்கம் செட்டியார். எனது தாயாரின் பூர்வீகம் ஆவனம் கிராமம் ஆகும். தாவா சொத்து எங்களின் பூர்வீக சொத்து இல்லை என்பதால் எங்கள் பெயரில் வருவாய் பதிவுகள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம். என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**